**முதல்வர் , தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: பேரா.மரு.G.ரவிக்குமார் MS., MCh**

ந.க.எண். 8117/நி3/2020 நாள்: .03.2022

பொருள்: நிர்வாகம் - தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் - செல்வி.R.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணை - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் பணி ஒதுக்கீடு ஆணை கடித ந.க.எண். 38842/நி2/5/2020-199 & 225 நாள்.07.08.2020 கடிதத்துடன் வரப்பெற்ற செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சென்னை, கடித ந.க.எண்.2383/PSD-12/2020 நாள்.21.07.2020.
2. சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநரின் கடித ந.க.எண்.31495/நி2/2/2020 நாள்.05.08.2020.
3. மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் பணி ஒதுக்கீடு ஆணை கடித ந.க.எண். 38842/நி2//5/2020-199 &225 நாள்.07.08.2020.
4. உதவி இயக்குநர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் பேரகம், தஞ்சாவூர் அவர்களது கடித ஓ.மு.எண்.010704/அ 5/2021 நாள். 26. 11.2021.

******

**ஆணை:**

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பார்வையில் பணிநியமன ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட கீழ்கண்ட இளநிலை உதவியாளர் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் 07.09.2020 மு.ப. பணியில் இணைந்துள்ளார். இவரது அசல் கல்வி சான்றிதழ்கள் சரிபார்ப்பு பார்வை 4 -ல் காணும் கடிதத்தின் மூலம் உண்மைத்தன்மை வாய்ந்தவை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிவிதி 23 (a) 1-ன்படி, இவரது தற்காலிகப்பணி அவர் அரசுப்பணியில் இளநிலை உதவியாளர்களாக பணியேற்ற நாள் முதல் வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது. (தகுதிகாண் பருவத்திற்குள் உரிய துறைத்தேர்வு மற்றும் பயிற்சி முடித்திருக்க வேண்டும்)

| வ. எண். | பெயர் (ம) பதவி | அரசுப்பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்த நாள். |
|---|---|---|---|
| 1. | செல்வி.R.சிவரஞ்சனி , இளநிலை உதவியாளர் | 07.09.2020 மு.ப | 07.09.2020 மு.ப |

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுகிறார்.

29/3/22

முதல்வர்,
தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.

பெறுநர்:1. செல்வி.R.சிவரஞ்சனி , இளநிலை உதவியாளர்
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்
- உரிய அலுவலக கண்காணிப்பாளர் வழியாக.

நகல்: கணக்கு 3 பிரிவு, தஞ்சை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
- அலுவலக கண்காணிப்பாளர் (கணக்கு) வழியாக.

நகல்: பணிப்பதிவேடு/கோப்புக்கு.